# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 13.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6529/A/2020**

திரு ஆர். சரவணன் .. மேல்முறையீட்டாளர்
கதவு எண்.12/55, முருங்கைவாடி
இராமேஸ்வரம் 623526

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் /
இணை ஆணையர் /
செயல் அலுவலர் அலுவலகம்
அருள்மிகு இராமநாதசுவாமி
திருக்கோயில்
இராமேஸ்வரம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 31.10.2019. தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவிலில் 2019 அக்டோபர் மாதம் புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்ட துப்புரவு பணியாளர்கள் குறித்து 5 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் 10.12.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் அனுப்பியுள்ளார்.

2. இதன் பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழ் 05.02.2020-ல் தமது முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர், பிரிவு

19(3)-ன்கீழ் 11.08.2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 16.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 06.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

4. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் 03.10.2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் எழுப்பிய கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கடிதத்தனை ஆணையத்திற்கு சமர்பித்துள்ளார். மனுதாரரும் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களில். தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்தார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

***//ஆணைப்படி//***

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-6529/A/2020</u>**
<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர் /
இணை ஆணையர்
செயல் அலுவலர் அலுவலகம்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்
இராமேஸ்வரம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

<u>மனுதாரர்</u>
திரு ஆர். சரவணன்
கதவு எண்.12/55, முருங்கைவாடி
இராமேஸ்வரம் 623526
JJ/PA 13/11/2020

பதிவு அஞ்சல் ஒப்புதல் – அட்டையுடன்

இணை ஆணையர்/செயல் அலுவலர் அலுவலகம்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்
இராமேசுவரம்

ந.க.எண்.190/2020/ஆ7 நாள்.03.10.2020

பொருள்: தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(1)ன்கீழ் – தகவல் அளித்தல் – அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம் – திரு.ஆர்.சரவணன், இராமேசுவரம் என்பவரது மனு – தகவல்கள் அளித்தல் – குறித்து.

பார்வை:
1) திரு.ஆர்.சரவணன் மனுநாள்.06.02.2020
2) இவ்வலுவலக ந.க.எண்.190/2020/ஆ7 நாள்.15.02.2020
3)திரு.ஆர்.சரவணன் மேல்முறையீட்டு மனுநாள்.05.02.20
4) இவ்வலுவலக ந.க.எண்.190/2020/ஆ7 நாள்.03.08.20
5) தமிழ்நாடு தகவல் ஆணையம், ஆணை எண். SA6529/SCIC/2020 நாள்.16.09.2020

------

பார்வை 1ல் காணும் திரு.ஆர்.சரவணன் என்பவரது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படியான மனுவிற்கு இவ்வலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையாக இல்லையென தெரிவித்து மேற்படியார் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில், பார்வை 5ல் காணும் தமிழ்நாடு தகவல் ஆணைய ஆணையின்படி மேற்படியார் கோரிய தகவல்கள் பின்வரும் விபரப்படி அனுப்பப்படுகின்றன.

**தகவல் எண்.1** **அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 2019 அக்டோபர் மாதம் புதிதாக ஒப்பந்தம் செய்த துப்புரவு பணி நிறுவனத்தில் எத்தனை துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் ஆண்கள் எத்தனை, பெண்கள் எத்தனை அவர்களின் பெயர், முகவரி, பணியின் விபரம் ?**

மொத்த பணியாளர்கள் 130,

ஆண்கள் – 38, பெண்கள் – 92

மேற்படி 130 நபர்களது பெயர், பதவி /பணி, ஆகிய விபரங்கள் அடங்கிய பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. பணியாளர்களது ஆதார் அட்டை நகல் இணைக்கப்பட்டுள்ளது. அதில் அவர்களது முழு முகவரி உள்ளது.

**தகவல் எண்.2** **தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தொகை எவ்வளவு? எதனடிப்படையில் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் ஆதார் எண், வருங்கால வைப்புநிதி எண் ?**
டெண்டர் தொகை அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சம்பளம் ரூ.7710/– ஆகும். மேற்படி 130 நபர்களது பெயர், பதவி /பணி, ESI உறுப்பினர் எண் மற்றும் EPF உறுப்பினர் எண் ஆகிய விபரங்கள் அடங்கிய பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி 130 பணியாளர்களது ஆதார் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**தகவல் எண்.3** **தனியார் துப்புரவு பணியாளர்களின் வேலை நேரம் (தனிநபர்) எவ்வளவு ?**

8 மணி நேரம்

<u>தகவல் எண்.4</u>

**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு தற்பொழுது பணியில் உள்ள தனியார் துப்புரவு நிறுவனத்திற்கு நிபந்தனைகள் தகுதிகள் என்னென்ன ?**

தூய்மைப்பணிக்கான டெண்டர் திறப்பின்போது ஒப்பந்த நிறுவனங்களுக்காக விதிக்கப்பட்ட டெண்டர் நிபந்தனைகளின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (ஏற்கனவே பார்வை குறிப்பு 4ன்படி அனுப்பப்பட்டுள்ளது).

<u>தகவல் எண்.5</u>

**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் தனியார் துப்புரவு தொழிலாளர்கள் பணி அமர்த்தப்படும் இடங்களின் விபரம் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை ?**

ஒப்பந்த நிறுவனத்தின் பணியாளர்கள் திருக்கோயில் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் பின்வரும் விபரப்படி பணியாற்றுகிறார்கள்.

| வ. எண் | இடங்கள் விபரம் | நபர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உபகோயில்கள் தூய்மைப்பணி | 5 |
| 2 | அன்னதானக்கூடம் | 3 |
| 3 | நந்தவனம் | 2 |
| 4 | பசுப்பட்டி | 2 |
| 5 | ஸ்ரீபர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமேசுவரம் | 2 |
| 6 | கார்பார்க்கிங் | 2 |
| 7 | கோடி தீர்த்தம் | 5 |
| 8 | அலுவலகம் | 11 |
| 9 | மடப்பள்ளி | 2 |
| | மொத்தம் | 34 |

| வ. எண் | விபரம் | 1st shift 5.00 am to 1.00pm | 2st shift 12.00 noon to 8.00 pm |
|---|---|---|---|
| 1 | கிழக்கு கோபுர நுழைவு வாயில் | 2 | 2 |
| 2 | திருக்கல்யாண மண்டபம் | 1 | 1 |
| 3 | மூன்றாம் பிரகாரம் | 8 | 8 |
| 4 | நந்தி மண்டபம் | 1 | 1 |
| 5 | பிரசாத ஸ்டால் | 1 | 1 |
| 6 | அம்பாள் சன்னதி | 2 | 2 |
| 7 | சுவாமி சன்னதி | 5 | 4 |
| 8 | இரண்டாம் பிரகாரம் | 1 | 1 |
| 9 | தீர்த்தம் 1 முதல் 22 வரை | 8 | 8 |
| 10 | அலுவலக வளாகம் | 1 | 1 |
| 11 | அலுவலகம் | 2 | 2 |
| 12 | அறை பதிவு அலுவலகம் | 1 | 1 |
| 13 | சேது இல்லம் தங்கும் விடுதி | 2 | 2 |
| 14 | திருப்பதி இலவச கழிப்பறை | 1 | 1 |
| 15 | பிர்லா இலவச கழிப்பறை | 1 | 1 |
| 16 | காலணி இடம் | 1 | 1 |
| 17 | ஜலான் காட்டேஜ் | 1 | 1 |
| 18 | முடி எடுக்கும் இடம் | 1 | 1 |
| 19 | வடக்கு கோபுர வாசல் | 1 | 1 |
| 20 | தெற்கு கோபுர வாசல் | 1 | 1 |
| 21 | மேற்பார்வையாளர் | 3 | 2 |
| 22 | கோடித்தீர்த்தம் அருகில் உடைமாற்றும் இடம் | 4 | 4 |
| | மொத்தம் | 49 | 47 |

சுருக்கம்

| | | |
|---|---|---|
| பொதுவான பணிகள் | – | 34 நபர்கள் |
| First shift | – | 49 நபர்கள் |
| Second shift | - | 47 நபர்கள் |
| கூடுதல் | – | 130 நபர்கள் |

சாதாரண காலங்களில் மேற்கண்டவாறு பணிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவிழாக்காலங்களில் இந்த பணிஒதுக்கீடு வேலைக்கேற்ப மாற்றி அமைக்கப்படும். தற்போது கொரோனா தொற்று காரணமாக பக்தர்கள் வருகை குறைவாக உள்ளதாலும், தீர்த்தக்கிணறுகள் திறக்கப்படாமல் இருப்பதாலும், நிதிச்சுமை காரணமாகவும் பணியாளர்களது எண்ணிக்கை தேவைக்கேற்ப குறைக்கப்பட்டு பணிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3/12/2020
தகவல் வழங்கும் அலுவலர்

பெறுநர்

1) ஆர்.சரவணன்
நகர் பொதுச் செயலாளர்
இந்து முன்னணி
கதவு எண். 12/55, முருங்கைவாடி, இராமேசுவரம்
செல்.9578302212

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது</u>

2) மாநில தலைமை தகவல் ஆணையர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை – 18.